

வயது மூப்பினால் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கடலூர்கிழக்கு மாவட்ட அவைத்தலைவர், முன்னாள் கடலூர் நகராட்சிதலைவர் து.தங்கராசு அவர்களை தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்ட க்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எம் .ஆர் .கே. பன்னீர்செல்வம் மருத்துவமனையில் மேற்கொள்ளும் சிகிச்சைகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்தார்.கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா,மாநகர மேயர் திருமதி சுந்தரி ராஜா, மருத்துவர் அணி தொகுதி அமைப்பாளர் டாக்டர்பால.கலைக்கோவன்அவர்கள், கம்மாபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. ஆர். ராயர் மற்றும் அவரது மகன்கள் த.ரமேஷ், த.செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மலைப் பகுதிகளில் மின் கம்பங்கள் மூலம் விநியோகிக்கப்படும் மின் இணைப்புகளை

# புதைவட மின்கம்பிகளாக மாற்றிட வேண்டும்!

## சட்டப்பேரவையில் பழனி - ஐ.பி.செந்தில்குமார் கோரிக்கை!

சென்னை, ஏப்.2-

சட்டப்பேரவையில் பழனி தொகுதி உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் செந்தில் பாலாஜி அளித்த பதிலும் வருமாறு:-



**ஐ.பி. செந்தில்குமார்**: நம்முடைய திராவிட மாடல் அரசு பல்வேறு புதிய முன்னெடுப்புகளை எடுத்துவரும் நிலையில், பொதுவாக மலை கிராமங்களில் பெரும் மழை பொழிவு, அதிக காற்று காலங்களில் மின் கம்பங்கள்மூலம் விநியோகிக்கப்படும் மின் இணைப்புகள் துண்டிக்கப் படும்போது வனப் பகுதியில் அதை சரிசெய்ய பல நாட்கள் ஆகின்றன. UG cable மூலம் சாலைகளின் வழியாக கிராமங்களை இணைக்கும் வகையில் feeder அமைத்து, தடையற்ற மின் விநியோகம் மலை கிராம மக்களுக்கு வழங்க நம் அரசு புதிய திட்டம் ஒன்றை ஆய்வு செய்து வழங்கிட வேண்டுகிறேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி**: முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிப் பகுதிகளில் புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய பணிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்று துறைக்கு உத்தரவுகளை வழங்கி இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் சென்னை மாநகராட்சி முழுவதுமாக அந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக துறை நடவடிக்கை எடுத்திருக்கின்றன. உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகின்ற பழனி சட்டமன்றத் தொகுதியில் அந்த மலைப் பகுதியில் இருக்கக்கூடிய தேவைகளை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். வரக்கூடிய ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப அரசு அதைப் பரிசீலிக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதியில்

# தொழில் பூங்கா அமைத்திட அரசு முன்வருமா?

## சட்டப்பேரவையில் காதர் பாட்சா முத்துராமலிங்கம் வினா!

சென்னை, ஏப்.2-

சட்டப்பேரவையில் இராமநாதபுரம் தொகுதியில் தொழிற் பூங்கா அமைக்க அரசு முன் வருமா? என்று தொகுதி உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் கேள்வி எழுப்பினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**காதர்பாட்சா முத்து ராமலிங்கம்**: ராமநாதபுரம் தொகுதியில், தொழிற் பூங்கா அமைக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி ராஜா**: இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டத்தில் சக்கரக் கோட்டை மற்றும் பட்டினம்காத்தான் ஆகிய கிராமங்களில் உள்ள அரசு நிலங்களை SIPCOT நிறுவனம் கண்டறிந்து வருகிறது. அதேபோல, ஒருசில இதர நிலங்களையும் SIPCOT நிறுவனம் ஆராய்ந்து வருகிறது. விரைவில் அங்கே நல்ல ஒரு SIPCOT அமைவதற்கான பணிகளை திராவிட நாயகன் அவர்களின் அரசாங்கம் செய்யும்.

**காதர்பாட்சா முத்து ராமலிங்கம்**: இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி வரை செல்லக்கூடிய கிழக்குக் கடற்கரை சாலையில் அயன்குடி என்ற கிராமத்தின் அருகில் வேளாண் மரபுப் பூங்கா அமைந்துள்ளது. அதன் அருகில் சுமார் 100 ஏக்கர் அளவில் அரசின் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் தொழிற்பூங்கா அமைக்கப் பெற்றால் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த தொழில்முனைவோர்களை ஊக்குவிப்பதற்கும், வேலை வாய்ப்பை உறுதிசெய்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்த இடத்தில் தொழிற்பூங்கா அமைப்பதற்கு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்து அமர்கிறேன்.

**அமைச்சர் டி.ஆர்.பி ராஜா**: திராவிட நாயகன் அவர்களின் இந்த ஆட்சியில்தான் அனைத்து மாவட்டங்களுக்கும் தொழில் வளர்ச்சி கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். எனவேதான், இராமேஸ்வரத்திற்கு ஓர் அற்புதமான புதிய விமான நிலையத்தையும் அறிவித்து,

இங்கே அமர்ந்திருக்கிறார் திராவிட நாயகன் அவர்கள். தொடர்ந்து இந்தப் பகுதியில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான அனைத்துப் பணிகளையும், அதிலும் குறிப்பாக தென் தமிழகத்திற்கு மிகப் பெரிய வளர்ச்சியைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அவர் கூறும் அந்தப் பகுதிகளையெல்லாம் ஏற்கெனவே ஆராய்ந்திருக்கிறோம். மிகவும் சரியான ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அங்கே SIPCOT கொண்டுவருவதற்கான பணிகளை திராவிட நாயகன் அவர்களின் ஆட்சி நிச்சயமாகச் செய்யும்.



**காதர்பாட்சா முத்து ராமலிங்கம்**: 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சருடைய கழக ஆட்சியில், குறிப்பாக இராமநாதபுரத்தில் பொறியியல் துறை படிப்பு படித்த இளைஞர்கள் வெளிநாடுகளிலும், வெளிமாநிலங்களிலும் வேலைக்காகச் செல்கிறார்கள். இந்த நிலை மாறி, கல்வியில் வளர்ந்து வரக்கூடிய மாவட்டமாக இருக்கக்கூடிய காரணத்தினால், இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு. ஒரு TIDEL Park அமைத்துத் தர வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடத்தில் நான் கோரிக்கை வைக்கின்றேன்.

**அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி ராஜா**: TIDEL Parkஉடன் TIDEL Neo என்பது அந்தப் பகுதிக்குச் சரியாக இருக்கும். ஏற்கெனவே, 10 TIDEL Neoக்கள் அறிவிக்கப்பட்டு, அவற்றில் 4 முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு மூன்று TIDEL Park under constructionல் உள்ளன. இன்னும் 3 TIDEL Parkகளுக்கான முதற் கட்டப் பணிகள் துவங்கி, நல்ல ஒரு நிலையில், வெகு விரைவில் அங்கே TIDEL Park அமைக்கும் பணியெல்லாம் இந்த திராவிட நாயகன் அவர்களின் ஆட்சி செய்து வருகிறது.

மதுரையில் ஒரு மிகப் பெரிய TIDEL Parkஐ அடிக்கல் நாட்டியிருக்கிறார் திராவிட நாயகன் அவர்கள். தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இன்று No.1 என்ற நிலையில் இருக்கிறது என்பதற்காக, அவைக்கு மற்றொரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

2021 ஆம் ஆண்டு மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு 1.86 Billion USD என்ற ஒரு நிலையில் இருந்தது. ஆனால் இன்று, திராவிட நாயகன் அவர்களின் ஆட்சியில், இந்த திராவிட மாடல் ஆட்சியில், இந்திய அளவில் உள்ள ஏற்றுமதியில் தமிழ்நாடு 37 சதவிகிதத்தை எட்டி, இன்று 12.62 Billion USD என்ற இலக்கை எட்டியுள்ளது. நிச்சயமாக வெகு விரைவில் 13 Billion USD என்ற இலக்கையும் எட்டும் என்ற நிலையில் உள்ளது என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியையும் அவைக்குக் கூறிக்கொள்கிறேன்.

வெகுவிரைவில் நிச்சயமாக இராமநாதபுரத்தில் TIDEL Neo அமைப்பதற்கான பணிகளையும் திராவிட நாயகன் அவர்களின் ஆட்சி செய்யும் .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கடலூர் மேற்கு மாவட்டம் கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் தகவல் தொழில்நுட்ப அணி பாக முகவர்கள் கலந்தாய்வுக் கூட்டம் முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் ஆர். மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. விருத்தாச்சலம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் சுபா. சந்திரசேகர் சிறப்புரையாற்றினார் . ஒன்றிய செயலாளர் என் .ஆசைத்தம்பி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஜி .எஸ். ஆனந்த் , முன்னாள் செயலாளர் வி .எஸ் முருகன் ,முன்னாள் பொருளாளர் ஆர் .தேவேந்திரன், பொறுப்புக்குழு உறுப்பினர்கள், வி.எஸ்.டி.சக்திவேல், எஸ்.ஆர். அரங்கநாதன், ஆர் .கணபதி ஆர். சேதுராமன் ஆர். பூமணி எம் .சி .பழனிசாமி, வெங்கடேசன், இளைஞரணி ஆர்.அருண் பிரபாகர், மகளிரணி கவிதா சாமிவேல், தகவல் தொழில்நுட்ப அணி,இளைஞரணி, விநாயகமூர்த்தி, சதா எழிலரசன் சூர்யா, ஜெயபிரகாஷ்,உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள நாகமங்கலத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் தர வேண்டிய ரூ 4034 கோடி நிதியை தராத ஒன்றிய அரசைக் கண்டித்து மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திருவரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி மணிகண்டம் ஒன்றிய செயலாளர் மாத்தூர் கருப்பையா உட்பட கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கடலூர் மாவட்டம் - வீராணம் ஏரியில் படகு இல்லம் - அரசு பரிசீலிக்கும்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் உறுதி!

சென்னை, ஏப்.2-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்த சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், "கடலூர் மாவட்டம் வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**சிந்தனைச் செல்வன்**: கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் 11 கிலோ மீட்டர் நீளமுள்ள கரையைக் கொண்ட வீராணம் ஏரி அமைந்திருக்கிறது.

தமிழர்களின் நீர் மேலாண்மைக்கு சான்றாக விளங்குகிற இந்த வீராணம் ஏரியில், சுற்றுலா பயணிகளை ஈர்க்கிறவகையில் படகு இல்லம் ஒன்றை கந்தக்குமரன் என்ற பகுதியில் அமைத்துத் தருவதற்கான முயற்சிகள் கடந்த ஆண்டு நடைபெற்றன. சுற்றுலாத் துறை இதில் கனிவோடு கவனம் செலுத்தி, இந்தாண்டு அதைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**: உறுப்பினர் சிந்தனைச் செல்வன், கடலூர் மாவட்டம், வீராணம் ஏரியிலே சுற்றுலா பயணிகளை கவர்வதற்கு வாய்ப்பாக, சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வாய்ப்பாக படகு இல்லம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### பென்னிகுவிக் மணி மண்டபத்தில் அவரது வரலாற்றை பிரதிபலிக்கக் கூடிய வகையில்

# அருங்காட்சியகம் - சிறுவர் பூங்கா அமைத்திடுக!

## சட்டப்பேரவையில் கம்பம் இராமகிருஷ்ணன் கோரிக்கை!

தேனி, ஏப்.2-

**நா. இராமகிருஷ்ணன்**: இலண்டனில் Camberleyல் தியாக சீலர் பென்னிகுவிக் திருவுருவச் சிலையை நம்முடைய முதல்வர் தளபதியார் அவர்கள் நிர்மாணித்தார்கள். Lower Campல் பென்னிகுவிக் மணிமண்டபம் இருக்கின்றது. அதை சுற்றுலாத் துறை எடுத்துக்கொண்டு. . .

அவரது வரலாற்றை அனைவரும் அறிகின்ற வகையில் 3D கண்ணாடி வசதியுடன் குறு பம்படத்தைக் காண்கின்ற வகையில் கலையரங்கம், அவர் பயன்படுத்திய அனைத்து பொருட்களையும் சேகரித்து அருங்காட்சியகம், சிறுவர் பூங்கா, ஒளி, ஒலி இசையுடன்கூடிய நீருற்று மற்றும் உணவகம், தங்கும் விடுதி, சுருளி ஆறு நீர்மின் நிலையம் மற்றும் LowerCamp சென்றுவர மாட்டுவண்டி வசதிகள் போன்ற கட்டமைப்புகளைச் செய்திட அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதனை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**: முல்லை பெரியாறு அணையை கட்டுவதற்காக பென்னி குவிக் அவர்கள் இங்கிலாந்து நாட்டிலேயிருந்து அவருடைய சொந்த சொத்துக்களை எல்லாம் விற்று, ஒரு பெரிய தாராள மனதோடு முல்லை பெரியாறு அணையைக் கட்டுவதற்காக நிதியினை நிரம்ப ஒதுக்கி தந்து அந்தப் பணியினை மேற்கொண்டு இருக்கிறார். அவருக்கு சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. நம்முடைய உறுப்பினர் நா. இராமகிருஷ்ணன் கோரிக்கையை வைத்திருக்கிறார், கடிதமும் கொடுத்திருக்கிறார்கள். சுற்றுலாத் துறை சம்மந்தமாக அரசு அதிகாரிகளை எல்லாம் கலந்து பேசப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்கு கொண்டு சென்று, அவருடைய கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை! ஞான.இமையநாதன் வரவேற்புரை!

# மயிலாடுதுறை - காளியில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஏப்.2 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் காளி கடைத் தெருவில் கழகத்தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பும்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான. இமையநாதன் வரவேற்றார். ஒன்றிய அவைத்தலைவர் வி.பன்னீர்செல்வம், துணைச் செயலாளர்கள் சுப.சிற்றரசன், சந்திரவைடிவம்ராஜா, பொருளாளர் கோ.மோகன், மாவட்ட பிரதிநிதிகள் கே.எஸ்.கண்ணன், க.கலையரசன், எஸ். செல்வமணி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.ஜெயக்குமார், கிளைச் செயலாளர்கள் எஸ். ராஜேந்திரன், டி.சின்னதுரை, எம்.ராமசாமி, கே. மதியழகன், கே.மாதவன், என்.மணி, ஜி.சுந்தரமூர்த்தி, ஒன்றியப் பிரதிநிதிகள் கே. சூரியமூர்த்தி, ஆர்.சாவித்ரி, டி,தனபால், செந்தில்ஸ்டலின், மகாலெட்சுமி, ஆர். ரமேஷ், ஏ.பேபி, ஆர். கார்த்திக்ராஜா, டி.குணசீலன், டி.குமார், ஜி.மகாலிங்கம், எஸ்.சரஸ்வதி, எம். பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர் அ.காந்தி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கோவி.உமாபதி, ஒன்றியக் கழக துணைச் செயலாளர் காவி.கார்த்திகேயன் ஆகியோர் தொடக்க உரையாற்றினார்கள்.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கி.சத்தியசீலன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், ஒன்றியச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், பி.முருகமணி, மங்கை எம். சங்கர், பஞ்சு.குமார், கு. வைத்தியநாதன், மயிலாடுதுறை நகரச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ. கபிலன், ஹர்சத், பேரூர்ச் செயலாளர்கள் என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா, அரசு வழக்கறிஞர் இராம. சேயோன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, டி.ராஜ்குமார், இரா.மனோகரன், சாந்தி இராமலிங்கம், பெரு.வீரமணி, வி.எஸ்.பிரபாகர், மணல்மேடு பேரூராட்சி தலைவர் கண்மணி அறிவழகன், மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் ரஞ்சித் (எ) துணை மாணிக்கம், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஏ.கே.எஸ். நாஜீம், ஜி,பி.கார்த்திகேயன், ஜெ.விஜயகுமார், பி.அதியமான், எஸ்.சுரேஷ், உஷா ராணிகுமார், சிவ.அன்பு, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.முடிவில் காளி கிளைக் கழகச் செயலாளர் எம்.ராகவன் நன்றி கூறினார்.

அதைத் தொடாந்து கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



தமிழக முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உத்தரவிட்டதன் பேரில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் திருக்கோட்டியூரில் ஒன்றிய செயலாளர் எஸ்.சண்முகவடிவேல் தலைமையில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, ஒன்றிய பொருளாளர் ஏ..எம்.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.